C.C.// 618 /2024

PW – 1

பெயர்: வடிவு

தேதி: 09.06.2026.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான், என் மகன் மாரியப்பன், என் மகள் செல்வி, என் மருமகன் பெருமாள் ஆகியோர் இரண்டாவது எதிரியையும் அவரது அம்மாவையும் கொலைமிரட்டல் விடுத்ததாகவும், காயம் ஏற்படுத்தியதாகவும் எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு உள்ளது, என்னை தான் அடித்தார்கள் நாங்கள் அடிக்கவில்லை. அந்த வழக்கிற்கு தற்போது வரை நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். நானும், எதிரிகளும் பாப்பான்குளம் பேராமணி வடக்குதெருவில் அடுத்தடுத்த வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எங்கள் இரண்டு குடும்பத்திற்கும் இடையே இடப்பிரச்சினை ரொம்ப நாளாக உள்ளது என்றால் சரிதான். நானும், எதிரிகளும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டிற்கு பின்புறம் உள்ள எங்கள் வீட்டிற்கு முன்புறம் உள்ள முடுக்கு பிரச்சினை தான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள முடுக்கிற்கு எதிரிகள் வரக்கூடாது என்று தான் பிரச்சினை செய்து வந்தோம் என்றால் எங்கள் இடம் அங்கு கிடக்கிறது.

பத்திரப்படி அந்த முடுக்கு எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி எங்களுக்கு இடம் இல்லை என்று அவர்கள் சொல்வதால் தான் பிரச்சினை என்றால் எங்களுக்கு அதுதான் வழி. முடுக்கு சம்பந்தமான பிரச்சினை தவிர உங்களுக்கு வேறு பிரச்சினை கிடையாது என்றால் சரிதான். எங்களுடைய தெரு கிழமேல் தெரு என்றால் சரிதான். அந்த தெருவில் வடபுறம் எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீடு எங்கள் வீட்டு பக்கத்தில் என்றால் எங்கள் வீட்டிற்கு வடபுறம் உள்ளது. எங்கள் இருவருக்கும் பிரச்சினைக்குரிய முடுக்கு தென்வடல் முடுக்கு என்றால் சரிதான். தெருவில் உள்ள எல்லாரும் ஒரே சமுதாயம் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு 15 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் இல்லை. சம்பவம் நடந்த உடன் காவல்நிலையம் சென்றுவிட்டேனா என்றால் 9 மணிக்கு காவல்நிலையம் சென்றேன்.

காவல்நிலையத்தில் எஸ்ஐ நான் மயக்கமாக இருந்ததால் என்னிடம் கைரேகை வாங்கி கொண்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டார்கள் என்றால் மருத்துவமனையில் தான் ரிப்போர்ட் எழுதினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று முதலாவது எதிரியின் மனைவியை

அவதூறாக பேசி அவர்களை தலைமுடியை பிடித்து இழுத்து அந்த சமயத்தில் தவறுதலாக சுவரில் இடித்து எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து பின் ஆலோசனை செய்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் என் கணவர் வீட்டில் இல்லை என்றால் கிழக்கே நின்றார். அவருக்கு சம்பவம் பற்றி நேரில் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்.

தெருக்காரர்கள் யாருக்கும் வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் நான் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எங்களுக்குள்ள இடப்பிரச்சினையை வைத்து அழகுபிரபாகரனின் அம்மாவை அவதூறாக பேசும் போது எனக்கு சுவரில் இடித்து ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi